# புதிய இதயம்

திங்கள் மின்னிதழ்

'CREATING NEW HEARTS TO RISE AND SHINE'

இதழ் 10 எழு...ஒளிவீசு... எசாயா 60:1 அக்டோபர் - 2022

## ஆசிரியரிடமிருந்து....

## இதய அன்பர்களே...



இந்தியா பல மதங்களின் தொட்டில். இங்கு 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' - கனியன் பூங்குன்றனார். மதம் என்பது கடவுளை அறிவதற்காக மனித ஆன்மா கடந்து செல்லும் வழியாகும். 'மதம் என்பதை மனித வாழ்விற்காக, மனிதன் நடந்து கொள்ள வேண்டியதற்காக, மனிதனுடைய முடிவான லட்சியத்தை அடைய வேண்டியதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சில விதிகள், எண்ணங்கள்' என்கிறார் பெரியார்.

'மதம் என்பது இதயமற்ற உலகின் இதயம், துன்பப்படும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய போதை; ஒடுக்கப்பட்ட மக்களின் ஏக்க பெருமூச்சு; ஆன்மா இல்லாத நிலைமையின் ஆன்மா' என்கிறார் கார்ல் மார்க்சு.

மதம் ஏன்? எதற்கு? என்பது யாரும் இதுவரைக்கும் எந்த மனிதரும் பொதுவான காரணம் சொல்லமுடியாது. ஆனால் ஒரு மெய்மை 'மதம் என்பது ஒரு மனிதனை நல்வழிபடுத்தி, நல்லது செய்ய தூண்டுதல் செய்து இறைமையில் கலக்கிற நெறி' என்று புரிந்து கொள்ளலாம். ஆனால் இன்றைய நிலை சற்று முரண்பாடு கொண்டது. எப்படியெனில் அறிவுக்கடந்து மடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சடங்கு சம்பிரதாயங்கள், இயற்கையை கடந்து இயற்கைக்கு எதிரான சதித்திட்டபோக்குகள், உண்மை கடந்து கற்பனை காட்சிகளுக்கு முக்கியத்துவம் தரும் சூழல்கள், பன்மையில் ஒருமையை புதைத்து ஒருமையே என சமயச் சாயம் பூசும் ஆதிக்க சக்திகளின் கோரத்தாண்டவம், பரவசத்தில் மனித நேயத்தை புதைக்கும் விழாக்கள், ஆடம்பர திருவிழாவில் களியாட்ட கூட்டங்களின் ஒழுக்கக் கேடுகள், ஜீவ காருண்யத்தை மறுத்து மனித உயிரை மதத்தின் பெயரால் காவு வாங்கும் காவிக் கூட்டங்களின் அத்து மீறல்கள், தன் சுய இலாப நோக்கத்திற்காக கடவுளை வைத்து பிழைப்பு நடத்தும் கயவ கூட்டங்களின் எண்ணிக்கை பெருக்கம்; கடவுள் ஆற்றலை காசுக்காக விலைபேசி மந்திரச் சக்தியில் மக்களை மயக்கும் துரோகச் செயல்பாடுகள், மதத்தை வைத்தே மக்களை சாதியால் பிரித்து சனாதனத்தை தூக்கி பிடிக்கும் மதவெறியர்களின் சித்து விளையாட்டுகள், வழிபாடுகளில் மூழ்கி வாழ்க்கையை வீணடிக்கும் சுயநல விரும்பிகளின் சீண்டல்கள் எல்லா மதங்களில் அறங்கேறிக் கொண்டு தான் இருக்கிறது. இந்த சாபக்கேடு முற்றிலும் பறித்து அழிக்கப்பட வேண்டிய களைகள். மதம் என்ற பெயரை வைத்து யார் மதவெறியை, சாதியை கட்டவிழ்த்து விட்டு தேச இறையாண்மைக்கு கேடு விளைவிக்கிறார்களோ, அவர்கள் பொருட்டு கவனமாக இருக்க வேண்டிய காலம் இக்காலம். இந்த மனநிலை கொண்ட மதங்கள் நிலைத்து நிற்காது. காலம் செல்லச்செல்ல மக்களே மறுக்கும் வெறுக்கும் மதங்களாக மாறும் காலம் தொலைவிலில்லை. யார் இவர்கள்.... யோசியுங்கள்.... மனசாட்சியை தட்டி எழுப்பி கண்டுணர்ந்து கொள்ளுங்கள்....

'எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால் வகுப்புவாதத்தையும், மதவெறியையும், வெறுப்புணர்வையும் பகைமையையும் வளர்க்கூடியவர்களை தீண்டத்தகாதவர்கள் என அறிவிப்பேன்' என்கிறார் மகாத்மா காந்தி

'மனிதனை முட்டாளாக்கி, பிரித்து வைத்து, குருட்டு நம்பிக்கையை விதைக்கிற மதம் மடத்தன்மை கொண்டது' என்கிறார் ஈ.வெ.ரா பெரியார்.

'மதமானது அநேகமாக எப்போதும் குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, வறட்டுக் கோட்பாடு, வெறியுணர்ச்சி, மூடநம்பிக்கை, சுரண்டல், உடமையாளர்களின் நலன்களை பாதுகாக்கும் அமைப்பு'. என்கிறார் ஜவகர்லால் நேரு.

'சுய சிந்தனை இல்லாதவன் தான் பிறந்த மதமே உண்மைச் சமயம் என்று எண்ணிக் கொள்வான்' என்கிறார் சேக்குவரா.

'உலகம் என் தேசம், நன்மை செய்வதே என் சமயம்' என்கிறார் லியோ டால்ஸ்டாய்.

மதவெறியர்களிடம் தேசம் இருக்கும் வரை வர்க்க பேதமும், அடிமை முறையும் நியாயப்படுத்தப்படும்? என்கிறார் டாக்டர். அம்பேத்கர்.

'சமயப்பற்றாளர்களை விட சமயவழியில் மனிதநேயம் காப்பவரும், ஏழை எளியவருக்கு இரங்குபவரும், அயலானில் ஆண்டவரை காண்பவரும், பிறரிடத்தில் அன்பும் மரியாதையும் காட்டுபவரை கடவுள் அதிகம் அன்பு செய்கிறார்' என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்

ஆம்..... இந்த கூற்றுகளின் வேள்வியில் மதங்கள், மதத்தலைவர்கள், மத நம்பிக்கையாளர்கள் தங்களை புதுப்பித்து வாழவேண்டிய, பணி செய்யவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம். இதயமும், மூளையும் உள்ளவர்கள் சிந்தித்து செயல்படட்டும்.

இதய சிந்தனைகளில் புதுக் கிளர்ச்சியை, பொது எழுச்சியை மாந்தருக்குள் கொண்டுவரும் நோக்கில் நம் 'புதிய இதயம்' அக்டோபர் மின்னிதழ் வெளிவருகிறது. சமூகம் பயனடைய பண்படைய ஆக்கமான சிந்தனைகளை தங்கள் படைப்புகள் வாயிலாக வழங்கும் எழுத்தாளர்களையும், ஆசிரியர் குழுவையும் என் இதயத்திலிருந்து பாராட்டுகிறேன்.

இதய வாசக அன்பர்களே... சமூக, ஆன்மீக விடியலுக்காக உழைக்கும் எங்களோடு கரம் கோர்க்கும் உங்களை பாராட்டி நன்றி கூறி மகிழ்கின்றேன். புதியம் இதயம் மின்னிதழை பகிருங்கள்... நீங்களும் பயன் பெறுங்கள்.

'மாற்றார் துணையின்றி மாநிலத்தில் வாழ்தல்
காற்றில் திரித்த கயிறு' - என்ற குறள் வெண்பாவிற்கு ஏற்ப மதம்கடந்து பன்மையில் பெருமை காப்போம் என பாரத தேசம் எங்கும் முழங்குவோம்...

இதய அன்பில்...

# மணவாட்டி ரெபேக்கா!



வனஜா அமல்ராஜ், தூளை - சென்னை

கணவன் மனைவி அன்புறவில் அடங்கியுள்ள மறைபொருள் திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகும் என்று தூய பவுல் எபேசியர் 5:31-32-ல் எடுத்துரைக்கிறார். கிறிஸ்துவுக்கு ஏற்ற மணவாட்டியாக வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, தொ.நூல். 24-ம் அதிகாரத்தை தியானித்து கிறிஸ்துவுக்கு ஏற்ற மணவாட்டியாக வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். விசுவாசத்தின் தந்தை, கடவுளின் நண்பர் என்று சாட்சிபெற்ற ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கிற்கு தம் சொந்த ஊரில் சொந்த உறவுமுறையில் பெண்கொள்ள விரும்பி, தன் மூத்த வேலைக்காரரை அனுப்பிவைக்கிறார். தம் தலைவருக்கு உண்மையும் உத்தமுமாய் உழைத்துவந்த அவர் மணவாளனுக்கு ஏற்ற மணவாட்டியை தேர்ந்தெடுத்து அழைத்துவரும்பொருட்டு பத்து ஒட்டகங்களில், பொன் வெள்ளி ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த அன்பளிப்புகளோடு கானான் நாட்டிலிருந்து நாகோர் நகர்நோக்கிப் பயணமாகிறார். நகரப் புதல்வியரில் மணவாளனுக்கு ஏற்ற மணவாட்டியைக் கண்டுணரும் நோக்கராய் அந்திசந்தி வேளையிலே, நீரூற்றின்

அருகினிலே, தண்ணீர் மொள்ளவரும் இளம்பெண்களின் வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்.

வேவைக்காரருக்கு ஆபிரகாமின் உறவின் முறையாரைப்பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாது. முன்பின் பார்த்ததும் கிடையாது. இப்போது ஒட்டகங்களுக்குத் தண்ணீர் காட்ட வேண்டும். தனக்கும் தாகம் தணிய வேண்டும். இச்சூழலில் அவருக்கு ஒரு யோசனைத் தோன்றிற்று. அதுவே நல்லதெனவும் சிறந்ததெனவும் எண்ணியவராய் ஆண்டவரின் திருவுளத்தை அறிந்து உறுதிசெய்யும் பொருட்டு பயணத்தின் வெற்றிக்காகவும் அவரது இரக்கத்திற்காகவும் ஒரு விண்ணப்பத்தை ஏறெடுக்கிறார். "தண்ணீர் பருகும்படி குடத்தைச் சாய்த்துக் கொடு" என்று நான் கேட்க, "குடியுங்கள்; மேலும் உங்கள் ஒட்டகங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் இறைத்து ஊற்றுவேன்" என்று எந்த இளம்பெண் மறுமொழி சொல்வாளோ, அவளே மணவாட்டியாவாள். இதுவே அவரது மன்றாட்டு.

என்ன ஆச்சரியம் பாருங்கள்! இதை அவர் தம் மனதிற்குள் சொல்லி முடிக்கும்முன்பே முடியுமட்டும் நான் தண்ணீர் இறைத்துக் கொடுப்பேன்" என்றாள் ரெபேக்கா. தமது பயணத்திற்கு ஆண்டவர் வெற்றி அளித்தாரா இல்லையா?! என்பதை உறுதிசெய்ய ஒட்டகங்கள் அனைத்தும் தண்ணீர் குடிக்கும்மட்டும் பார்த்துநின்றவர் ஆச்சரியம்மேலிட வாயடைத்துப் போனார்.

'முணுமுணுக்காமலும் வாதாடாமலும் யாவற்றையும் செய்யுங்கள். அப்பொழுதான் நீங்கள் நெறிகெட்ட சீரழிந்த தலைமுறையினரிடையே குற்றமும் கபடுமற்றவர்களாய்க் கடவுளின் மாசற்ற குழந்தைகளெனத் திகழ்வீர்கள்; உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள்' (பிலி. 2:14,15) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப கடைசி ஒட்டகம் தண்ணீர் குடிக்கும்மட்டும் முகமலர்ச்சியோடும் முழுஉள்ளத்தோடும், தன்னார்வத்தோடும் தாராளமனத்தோடும் இறுதிரை மனஉறுதியோடும் உற்சாகத்தோடும் தம் பணியை செய்து முடித்தவராய் நற்சான்றுக்குரிய அன்பளிப்பையும் பெற்றுக்கொண்டார் ரெபேக்கா. இவரே மணவாளனுக்கு ஏற்ற மணவாட்டி என்று கண்டுணர்ந்துகொள்ள இன்னும் வேண்டுமோ



இதோ! ரெபேக்காள் தம் தோள்மீது குடத்தை வைத்துக்கொண்டு வந்தார். இது ஆண்டவரால் ஆன காரியமன்றோ!! தருணத்திற்காகக் காத்திருந்தவர் தாகத்திற்கு தண்ணீர் என்றவுடன், சிறிதும் தயங்காமல் ஓடோடிச்சென்று குடத்தில் தண்ணீரை மொண்டு தாராளமனதுடன் 'குடியுங்கள் ஐயா' என்றவளாய்க் குடத்தை சாய்த்துக் கொடுத்தாள் ரெபேக்கா. முன்பின் அறியாதவராயினும் "உங்கள் ஒட்டகங்களும் குடித்து இன்னொரு சாட்சி! இப்போது மூக்கணியும் கைக்காப்புகளும் ஜொலிக்க ஒளிரும் சுடராய் தன்னருகே நிற்கும் கன்னிப்பெண் யாரென்று அறிய விரும்பினார் வேலைக்காரர்.

ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கு மில்கா பெற்ற பெத்துவேலின் மகள்தான் ரெபேக்கா; அவள் சகோதரன் லாபான் என்ற விவரங்களை அவள்

வாயிலாகவே அறிந்துக்கொண்டார். ஆண்டவரைப் பணிந்து தொழுதுகொண்டார். மேலும் அவளுடைய வீட்டாரைப் பார்த்து வரன்பேச விரும்பி, ‘இரவு தங்குவதற்கு இடம் இருக்குமா’ என்ற கேள்வியை அவள்முன் வைத்தார். அதற்கு ரெபாக்காவும், “எங்கள் வீட்டில் வைக்கோலும் தீவனமும் மிகுதியாக இருப்பதுமன்றி, தங்குவதற்கு இடமும் உண்டு” என்று கூறி தன் விருந்தோம்பும் மனப்பாங்கை வெளிப்படுத்தி நற்குணசீலியாய் தன்னை மெய்ப்பிக்கிறவளாய், நிகழ்ந்த அனைத்தையும் தன் இல்லத்தாரிடம் எடுத்துக்கூற விரைந்தோடுகிறாள்.

ரெபேக்காளின் சகோதரன் லாபான் வேலைக்காரரைக் கண்டவுடன், “ஆண்டவரின் ஆசீ பெற்றவரே வருக!” என்று வாழ்த்தி வரவேற்று தன் இல்லத்திற்கு அழைத்துச்செல்கிறார். “அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு வீருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழிச்சிப் படுத்தியதுண்டு” என்கிறது எபிரேயர் 13:2. ஆபிரகாம் வேலைக்காரரை அனுப்பி வைக்கும்போது, “ஆண்டவர் திருமுன் நான் வாழ்ந்து வருகிறேன். அவர் உன்னோடு தம் தூதரை அனுப்பி உனது பயணத்தை வெற்றிபெறச் செய்வார்” (தொ.நூ.24:40) என்று வாழ்த்திக் கூறிய வாக்கை இங்கு நினைவுகூர்வோம்!.

ரெபேக்காவை ஈசாக்கிற்கு பெண்கேட்ட வேலைக்காரர் பெத்துவேலிடம், ஆபிரகாமின் செல்வாக்கையும் பெருமையையும்பற்றி சொல்லும்போது அபிரகாமின் மனைவி சாரா தம் வயது முதிர்ந்த காலத்தில் மகன் ஈசாக்கைப் பெற்றெடுத்ததையும் எடுத்துக்கூற மறந்துவிடவில்லை. பெத்துவேலும் எதிர்மொழி ஏதும் சொல்லாமல், “இச்செயல் ஆண்டவரால் நிகழ்ந்துள்ளது” என்று கூறி பெண்ணை அழைத்துச்செல்ல அனுமதி தருகிறார். மறுநாள் காலையில் வேலைக்காரர், பெண்ணை அழைத்துக்கொண்டு விடைபெற ஆயத்தமாகும்போது பெண்ணின் வீட்டாரோ பத்து நாட்கள் கழித்து பெண்ணை அனுப்புவதாக விருப்பம் தெரிவிக்கிறார்கள். ஆனால் ரெபேக்காவோ, ‘இவரோடு போகிறாயா?’ என்ற கேள்விக்கு சற்றேனும் தயங்காமல் ‘போகிறேன்’ என்கிறாள். “ஆண்டவருக்கு அஞ்சுவோர் எதற்கும் நடுங்கவோ தயங்கவோ மாட்டார்கள்” (சீராக் 34:14) என்ற இறைவார்த்தைக்கு சான்றாகிறாள்.

இத்தனை ஆண்டளவாய் வளர்த்து, பாதுகாத்து, பராமரித்து, அரவணைத்து, அன்பு பாராட்டிவந்த அத்தனை உறவுகளும் தனக்கு தற்காலிகமானது; மணவாளன் உறவே தனக்கு உரிமையும் நிரந்தரமுமானது என்பதை சட்டெனப் புரிந்தவளாய் அவரோடு பயணிக்க சித்தம் கொண்டாள். ‘நற்பண்புகளின் நாயகியாய் நிற்கின்ற நங்கை என் தங்கை’ என்ற பெருமிதத்தோடு லாபானும் அவர் வீட்டார் அனைவரும் அவளை வாயார வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். “என் பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதர சதோதரிகளையோ, தாயையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ நிலபுலன்களையோ, விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப்பேறாக அடைவர்” (மத்.19:29) என்ற இறைஇயேசுவின் வார்த்தை இங்கு நினைவுக்கு வருகிறதன்றோ! வெற்றி பயணம் வீரநடைபோட்டது!. நெகேபு பகுதியிலே மாலை வேளையிலே வயல்புறமாய் நின்றுகொண்டு கண்களை உயர்த்தி பார்த்த ஈசாக்கிற்கு கண்கொள்ளா காட்சியாய் இருந்தது ஒட்டகங்களின் வருகை. அவரின் வருகையைக் கண்டமாத்திரத்தில் ஒட்டகத்தை விட்டு கீழே இறங்கிய ரெபேக்கா இவரே தன்னை மணக்க இருக்கும் மணவாளன் என்பதை அறிந்ததும் தன்னடக்கத்தின் தன்மையாய்த் தம் முக்காட்டை எடுத்து தன்னை மூடிக்கொண்டாள். மணவாழ்வில் வெற்றிக்கண்டாள்.

‘எனது மணவாளனே, என் இனிய இயேசுவே!’ என்று பாடினால் மட்டும் போதுமோ! அதற்கு ஏற்றாற்போல வாழ வேண்டாமோ! ‘இயேசு கிறிஸ்துவை அணிந்துக் கொள்ளுங்கள்’ ‘கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் என்ற இறைவார்த்தைகளை இதயத்தில் இருத்தி தூய ஆவியாரின் துணைகொண்டு தூயவராம் இயேசுவின் மணவாட்டியாவோம்.

# தமிழ் அறம்

தொடர்ச்சி,

மரபுப்பாவலர். அகன், கீரனூர், புதுக்கோட்டை (மாவட்டம்).

## ஊர்:



குறிஞ்சி நிலங்களில், பாறைகளின் இடையில் இயற்கையாக அமைந்திருந்த குகைகளிலும், மரங்களிலும், மரங்களின் அடியிலும் வாழ்ந்த மக்கள், முல்லைநிலத்திற்கும் பரவினர்! மரத்தின் கிளைகள் வட்டமாகப் படர்ந்தும், நிலத்தில் படிந்தும் உள்ள இயற்கைப் போக்கினைக் கண்டறிந்து, அதனைப் போலவே குடியிருப்புகளை அமைக்கக் கற்றனர்!

மண்சுவர்களைக் காற்று மறைப்புகளாக எழுப்பி, இலை-தழைகளினால் ஆன கூரையை மழைத்தடுப்பாகச் சரிவாக அமைத்துக் கொண்டனர்.

பொதுவாக, மழைநீர் தேங்காத, மேடான, உயர்ந்த இடங்களிலேயே குடியிருப்புகளை அமைத்தனர்! உயர்ந்த இடங்களில் அமைந்த அக்குடியிருப்புகள் ‘உயர்’ எனப்பட்டன! பின்னர், ‘உயர்’-என்பது ‘ஊர்’ என்றானது!

தமிழ்மொழியில், சொல்லாக்க நெறிகள் பல உள்ளன! அவற்றில் ஒன்று:-

ஒரு சொல்லின் தொடக்கத்தில் இரண்டு குறில் எழுத்துகள் அமைந்திருந்தால், இரண்டாம் குறில் எழுத்து, மெய்யும் உயிருமாகப்பிரிந்து மெய் எழுத்து நீங்கிவிடும்; உயிர் எழுத்து, முதல் எழுத்தின் உயிர் எழுத்தோடு இணைந்து அம் முதல் எழுத்தை இருமாத்திரைகள் கொண்ட நெடில் எழுத்தாக மாற்றிவிடும்:

உயர் - என்ற சொல்லின் முதல் குறில் எழுத்து, ஒரு மாத்திரை ஒலிப்புடைய ‘உ’ ஆகும்! இரண்டாம் குறில் எழுத்து ‘ய’ , ய்அ - எனப் பிரிந்து, ய்- நீங்கிவிட, ‘அ’ - முதல் எழுத்து உ- உடன் இணைந்து, உஅ - ஊ என்று, நெடில் எழுத்தாக மாறும்!

உயர் - உ (ய்அ) ர்!
ய் - நீங்கிய பின், (உஅ)
ர் - ஊர் என்றாகும்.

இந்த மொழியியல் நெறிக்கேற்ப மாறும் சில சொற்கள்:

அகல் - ஆல் - அகன்ற ஆலமரம்
அகழி - ஆழி - ஆழ்ந்து அகன்ற நீர்நிலை.
உயரி - ஊரி - தாழ்வான பொந்து, புற்றுகளிலிருந்து மேல்நோக்கி வரும் உயிரி.
பயம் - பேம் (பேய்) அச்சம்
பகுதி - பாதி; மிகுதி - மீதி.
தொகுப்பு - தோப்பு - பல இணைந்துள்ளது.
வியர்வை - வேர்வை - தோலில் வெளிப்படும் கழிவுநீர்.
பெயர் - பேர்; பெயரன் - பேரன்...

## கல்லூரி:

இவ்விடம், கல்லூரி என்ற ஒரு கலைச் சொல்லை, அச்சொல் ஆக்கப்பட்ட முறையை அறிந்து கொள்ளுதல் நன்றாகும்!

கல்வி உயிரி - கல்வியை உயர்த்தும் அமைப்பு.
உயரி என்ற சொல் ஊரி என்றாகும்!
கல்விஊரி - கல்விஊரி
கல்வி என்பது 'கல்' - என்றும் ஆகும்!
'இளமையில்கல்' - என்பது முதுமொழி!
அதன்படி, கல் ஊரி - கல்லூரி!

## கம்பி:

முல்லை நிலவாழ்வில், இரும்பு கண்டுபிடிக்கப்பட்ட பின், மரக்கம்புகளைப் போலவும், மர ஈட்டி, வேல் முதலானவற்றைப் போலவும், இரும்பால் செய்து கொண்டனர்! கம்பு போல் செய்யப்பட்ட இரும்புக்கருவி 'கம்பி' - ஆனது! பின், அறுவாள், அரிவாள், சம்மட்டி போன்ற பல கருவிகளையும் இரும்பால் செய்து கொண்டனர்!

ஊர்களில் வாழ தொடங்கிய பின், மலை அடி வாரங்களில் வாழும் ஆடு, மாடு, எருமை, கோழிகளைப் பிடித்துப் பழக்கி, வீட்டுவிலங்குகளாக்கினர்! அவற்றின் பாலையும், ஊனையும் உண்டனர்!

பால், தயிர், வெண்ணெய், மோர், நெய் - என்னும் 'ஆன் ஐந்து' - அஃ்.தாவது கறவைகளிலிருந்து பெறப்படும் ஐந்து உண்பொருள்களை உருவாக்க கற்று உண்டனர்!

காட்டு நாய், பூனைகளைப் பழக்கி வீட்டில் வளர்த்து, நரி, ஓநாய், எலி ஆகியனவற்றை விரட்டிக் கால்நடைகளையும், உணவுப்பொருள்களையும் பாதுகாத்தனர்!

பூனைக்குப் பகலில் கண்பார்வை மங்கி இருப்பதால் அதனைக் குருடு என்றனர்! 'குருடு' என்ற சொல், குருட்டி- கொத்தி- கொத்தை என்று திரிபுற்றும் வழங்கப்பட்டது!

குருட்டி - கொரட்டி - கொட்டி - கேட்டி என்றும் பலவாகத் திரிபுற்றது!

இச்சொற்களே, பின்னர் ஈரோப்பியாவிற்குப் பரவிய தமிழர்வழி, கிரேக்கத்தில் பரவிப், பழைய ஆங்கிலத்தில் நயவ என்றும், பிரஞ்சில் நாயவ என்றும் குறிப்பிடப்படுகின்றன!

பூனை அரவமின்றி மெல்ல மெத்தென நடப்பதால், புசுபுசு, பூசுபூசு, பூசை என்றும் குறிப்பிடப்பட்டது நம் தமிழர்களால்! இன்றும், திருநெல்வேலிப் பகுதிகளில் 'பூசுபூசு' என்றே பூனை சுட்டப்பெறுகின்றது! ஆங்கிலம் முதலான ஈரோப்பிய மொழிகளில், puss, pussy என்றே பூனை குறிக்கப்பெறுகிறது! இச்சொற்களுக்கான வேர்ச்சொல் நம் தமிழிலேயே உள்ளன!

## உழவுத்தொழில்:



வான் மழைப்பொழிவால் இயற்கையாக விளைந்திருந்த, நெல், கம்பு, சோளம், வரகு, கேழ்வரகு, சாமை, திணை, குதிரைவாலி, காடைக்கண்ணி - ஆகிய ஒன்பது தவசங்களையும்; அவரை, துவரை, உளுந்து, பச்சை, தட்டை, மொச்சை, கொள், கல், கரம்பை - ஆகிய ஒன்பது பயறுகளையும் தேடித்திரட்டி,

நெருப்பில் சுட்டும், வாட்டியும், வறுத்தும்; நீரில் ஊறவைத்தும் உண்ணக் கற்றனர்!

அக்காலத்தில், நிலப்பரப்பில் முக்கால் பங்கிற்குமேலும் மரங்கள் அடர்ந்த அடவியாக இருந்தமையால், கோடை மழை, கால மழை, அடை மழை, படை மழை ஆகிய நால்வகை மழையும் காலந்தவறாமல் பெய்து வந்தன! அ(ல்)கால வம்ப மழையும் பெய்தது. அதனால், தவசங்கள் ஒன்பதும் இயற்கையாக விளைந்திருந்தன!

முல்லைநிலக் குறுங்காடுகளை இரும்புக் கருவிகளால் வெட்டிக்கொன்று நெருப்பிட்டு அழித்து நிலங்களான மாற்றினர்! காடுகள் கொன்று பெற்ற அந்நிலங்களைக் 'கொல்லை' - என்று குறிப்பிட்டனர்!

அடர்ந்த மரம், செடி, கொடி, புதர்களால் இருண்டு கண்ணுக்குப் புலனாகாமல் இருந்த நிலங்கள், அவை அழிக்கப்பட்டபின் கண்களுக்குப் புலப்பட்டமையைக் கருதிப், புலன், புலம் என்றும் அந்த நிலங்கள் குறிப்பிடப்பெற்றன!

அக்கொல்லைகளில், இரும்பால் செய்யப்பட்ட ஏர்களைக் காளை, எருமை ஆகியவற்றைக் கொண்டு உழுதனர்! மழைப்பொழிவை நம்பிப் பயிரிட்டு அறுவடை செய்து பயன் கொண்டனர்! வான்மழையால் விளைச்சல் தந்த அந்த நிலங்களை 'வானாவாரி' - என்றும் குறிப்பிட்டனர்!

புணர்ச்சி இன்பத்திற்கு மட்டுமின்றி, வேளை தோறும் உணவை அளிக்கவும், தொழிலுக்குத் துணையாகவும் உடைமைகளை பாதுகாக்கவும், நோய் நிலையில் நலம் பேணவும், ஓர் ஆணும் ஒருபெண்ணும் கூடிவாழும் கூட்டு வாழ்க்கை முறை ஏற்பட்டது! அது இல்வாழ்க்கை எனப்பட்டது.

- தொடரும்



## செப்டம்பர் மாதம்

## திருத்தூதர் பணிகள்
14 முதல் 28 வரை

## சரியான விடை எழுதியோர்

1. Sr. Shirley,
   Ashishe pavan, Kadapa.

2. Stella Jeyaraj,
   Sivagangai.



# வினாடி வினா - 9 (விடைகள்)

## திருத்தூதர் பணிகள் 14 முதல் 28 அதிகாரங்கள்

## விடைகள்

1. யார்? யாரிடம் கூறியது?
   திருத்தூதர் பணிகள் : 23 . 11
   திருத்தூதர் பணிகள் : 19 . 13
2. திருத்தூதர் பணிகள் : 16 . 6, 7
   திருத்தூதர் பணிகள் : 16 . 25
3. பொருத்துக:
   திருத்தூதர் பணிகள் : 17 . 16
   திருத்தூதர் பணிகள் : 21 . 16
   திருத்தூதர் பணிகள் : 18 . 2
   திருத்தூதர் பணிகள் : 15 . 22
   திருத்தூதர் பணிகள் : 27 . 8 (அடிக்குறிப்பு) 4.
   திருத்தூதர் பணிகள் : 20 . 24
   திருத்தூதர் பணிகள் : 21 . 13
5. திருத்தூதர் பணிகள் : 19 . 20
   திருத்தூதர் பணிகள் : 15 . 9
6. திருத்தூதர் பணிகள் : 22 . 3 , 4 , 5
7. சரியா? தவறா? எனக் குறிப்பிடுக :
   அ.) சரி - திருத்தூதர் பணிகள் : 28 . 11
   ஆ.) தவறு - திருத்தூதர் பணிகள் : 26 . 14
   இ.) சரி - திருத்தூதர் பணிகள் : 24 . 24
8. திருத்தூதர் பணிகள் : 25 . 13, 16
9. அதிகாரம் வசனம் குறிப்பிடுக
   திருத்தூதர் பணிகள் : 23 . 1
   திருத்தூதர் பணிகள் : 27 . 31
10. திருத்தூதர் பணிகள் : 15 . 16, 17, 18

# பெற்றோர்களின் பொறுப்பு

அ. லிண்டா, சென்னை.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று

என்பது சான்றோர் மொழி.

சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது என்கிறது விவிலியம்.

தெய்வத்தன்மையுடன் உலாவரும் குழந்தைகள் தான் பிற்காலத்தில் சமூக சேவர்களாகவும், சமூக விரோதிகளாகவும் உருவெடுக்கிறார்கள். இந்த மாற்றத்திற்கான முக்கிய காரணம் என்னவென்று சற்று ஆழமாக சிந்திப்போமாயின் அதற்கான விடையை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே! அது நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்பினிலே!

குறைகூறியே வளர்க்கப்படும் குழந்தைகள் பிறரை வெறுக்கக் கற்றுக்கொள்கிறார்கள் எப்பொழுதும் அடக்கி வளர்க்கப்படும் குழந்தைகள், பிறருடன் சண்டையிட விழைகின்றார்கள்.

அவமானப்படுத்தப்படும் குழந்தைகள் எதிர்காலத்தில் குற்றவாளிகளாக உருவாகுகின்றார்கள். குழந்தை வளர்ப்பு என்பது மிகப்பெரிய பொறுப்பாகும். தலைசிறந்த குடிமக்களை உருவாக்கும் கடமை இன்றைய பெற்றோருடையது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

சிறுபிராயத்திலிருந்தே ஊக்கப்படுத்தப்பட்டு, பாராட்டப்பட்டு, நீதி, நேர்மை அறிவுறுத்தப்பட்டு மன உறுதியுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் உலகை அன்பு செய்யவும், பணிகளை சிறப்புடன் முடிக்கவும், நேர்மையுடன் நடந்து கொள்ளவும் கற்றுக் கொள்கிறார்கள்.

இன்றைய இளம் பெற்றோர்கள்தான் நாளைய உலகை செதுக்கும் சிற்பிகள் ஆவர். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சிறிய கற்களை அன்பு என்ற உளியால் கலைநயமிக்க சிற்பங்களாக மாற்றக்கூடிய திறமையை ஒவ்வொரு பெற்றோரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். குடும்பமே ஒருவருக்கு தலைசிறந்த பள்ளிக்கூடம்! பெற்றோரே முதன்மையான ஆசான்!!

எதிர்கால வளமை மிகு சமுதாயம் நிகழ்கால பெற்றோரின் கரங்களில்... சிந்திப்போம். செயல்படுவோம். புது உலகு படைப்போம்.

# இயற்கை அன்னை

பிரின்ஸி . அ, முடிச்சூர்



உலகின் ஒவ்வொரு அணுவிலும் உயிரோட்டம்!
இயற்கை அன்னை சிரிக்கிறாள்
புல்வெளியில் பனித்துளியாக! தாவரத்தில் பூவாக!
பூவில் தேனாக! இலையில் பச்சையமாக!
நீரோடையில் மீனாக! மின்மினியில் வெளிச்சமாக!
பட்டாம்பூச்சியில் அழகாக! வானவில்லில்
வண்ணமாக!
நிலவில் ஒளியாக! சூரியனில் கதிராக!
மழலையில் சிரிப்பாக! மனிதனில் நேயமாக!
நானும் கூட அவள் படைப்பின் அற்புதம்!
எத்தனை எழில்கோலம் கொண்டாய்
இயற்கை அன்னையே!
அதில் இறைக்காட்சி காணவைத்தாய்
ஏழை என்னையே!

# புற்றுநோய்
# (CANCER)

வே.மெர்லின்,
அரசு கீழ்ப்பாக்க மருத்துவ கல்லூரி,மருத்துவமனை, சென்னை.



புற்றுநோய் என்பது கேடுதரும் உடற்கட்டிகளால் ஏற்படும் பல நோய்களின் பொதுவான ஒரு பெயர். இயல்புக்கு மாறாகக் கட்டுபாடற்று உயிரணுக்கள் பிரிந்து பெருகுவதால், ஏற்படும் மிகைப்பெருக்கம் அருகிலுள்ள இழையங்களில் ஊடுருவி ஏனைய உடற்பகுதிகளுக்கும் பரவும் ஆற்றலை கொண்டும், அவை கேடுதரும் கட்டிகளை (MALIGNANT TUMOR) அல்லது புற்றுநோய் எனப்படும். இவை உடலில் இருக்கும் இடத்தைப் பொறுத்து என்ன நோய் என்று பெயரிடப்படுகின்றது. கேடு விளைவிக்கா கட்டிகள் (BENIGN TUMOR) உடலின் வேறு பாகங்களுக்குப் பரவுவதில்லை.

உடலானது பல வகைப்பட்ட உயிரணுக்களால் உருவாக்கப்பெற்றது. இயல்பாகவே உடலில் உள்ள உயிரணுக்கள் பிரிந்து, வளர்ந்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள தேவையான அளவுக்கு உயிரணுக்களைப் புதிதாக உருவாக்குகிறது.

சில வேளைகளில் உடலுக்குத் தேவையற்ற பல புதிய உயிரணுக்கள் தோன்றுகின்றன. உடலில் உள்ள பழைய வயதடைந்த உயிரணுக்கள் இறக்க வேண்டிய நேரத்தில் இறந்து வெளியேறாமல் உடலிலேயே மிகுபடுகின்றன. இவ்வாறான அதிகப்படியான உயிரணுக்கள், கழலை அல்லது கட்டி எனப்படும் இழையங்களின் கூட்டை ஏற்படுத்துகிறது. முதிர்ச்சியடைந்த நிலையில் இந்த புற்றுநோய் உயிரணுக்களின்

பரவல் குருதி சுற்றோட்டம் வழியாகவோ அல்லது நிணநீர்த் தொகுதி (Lymphatic System) வழியாகவோ பரவக்கூடும்.

## புற்று நோய்க்கான காரணிகள்




புகையிலை பாவனை- 22% புற்றுநோய் இறப்புக்கு காரணமாகின்றது.

10% இறப்புக்கு, உடற்பருமன், திட்ட உணவு இல்லாமை போதியளவு உடற்பயிற்சி இல்லாமை, அளவுக்கதிகமான மது பாவனை- காரணமாகிறது.

சில புற்றுநோய்- நோய்த்தொற்றுக்கள் (Infection) அயனியாக்கும் கதிர் (Radiation), சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமான நச்சுப்பொருட்களால் ஏற்படுகிறது.

சில புற்றுநோய் (Epstein Barr Virus, எச்.ஐ.வி, ஈரல் அழற்சி, Hepatitis C, எலிக்கோபேக்டர் பைலோரி என்னும் பாக்டீரியா)- இந்த காரணிகள் உயிரணுக்களிலிருக்கும் மரபணுக்களில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

5-10% புற்றுநோய்கள் பாரம்பரியமாக பெற்றோர்களிடம் இருந்து பெறப்படும் மாறுபட்ட மரபணுக்களில் இருந்து வருபவையாக் இருக்கின்றன.

உயிரணு பிரிதலை கட்டுப்படுத்தும் புரதங்களில் (Retino blastoma Protein) or புற்றுநோய் வராமல் அடக்கி வைக்கும் மரபணுக்களில் (Tumor Suppressor)- இவற்றில் ஏற்படும் இழப்புகள் or தொழிற்பாடு இல்லாமல் போய் (or) குறைந்து ஒழுங்கமைவுகள் (Regulation) இல்லாமல் உயிரணுப் பெருக்கம் அடைந்து (Proliferation) புற்றுநோய் உருவாகிறது.

அண்மைய ஆய்வுகள் குறு RNA-க்களில் ஏற்படும் மாற்றங்களினாலும் புற்றுநோய் தூண்டபடுவதாக உறுதி செய்துள்ளன.

மனிதரில் 100க்கும் மேற்பட்ட புற்றுநோய்கள் அறியப்பட்டுள்ளன.

ஒவ்வொருவகைப் புற்று நோய்க்குமான காரணிகள் வேறுபடும்.

## புற்றுநோய் வராமல் தடுக்கும் காரணிகள்

புகைபிடித்தல்- செய்யாமல் இருத்தல்.

அளவான உடல் நிலையை பேணல்.

அளவுக்கதிகமாக மதுசாரம் பயன்படுத்தாமை.

அதிகளவில் காய்கறிகள், பழங்கள், முழுமையான தானியங்கள் (whole grain) போன்றவற்றை உண்ணுதல்

அளவுக்கதிகமாக பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் சிவப்பு இறைச்சி போன்றவற்றை உண்ணுவதை தவிர்த்தல்.

சூரிய ஒளிக்கு அளவுக்கதிகமாக வெளிப்படுத்தப்படாமல் இருத்தல்.

சில தொற்று நோய்களுக்கு எதிராக தடுப்பு மருந்தேற்றம் செய்து கொள்ளாமல் போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

## புற்றுநோய்க்கான சிகிச்சை

அறுவை சிகிச்சை
வேதிச் சிகிச்சை
கதிர் மருத்துவம்

புற்றுநோய் பாதித்த இடம், கட்டியின் தர வரிசை (Stages) புற்றுநோயின் நிலை, மற்றும் நோயாளியின் பொதுவான நிலை ஆகியவற்றை அறிந்து கொண்ட பின்னரே சிகிச்சை முறையைத் தேர்வு செய்யலாம்.

ஆனால் நுண்மையான (Metastasis) மூலம் புற்றுநோய் அண்மையில் உள்ள திசுக்களுக்கு பரவும் வாய்ப்பு அல்லது தூரமான இடத்திற்குப் பரவும் வாய்ப்புகள் பல நேரங்களில் இச்சிகிச்சையின் ஆற்றலைக் குறைத்து விடுகின்றன.

வேதிச்சிகிச்சையின் (Chemotherapy) ஆற்றல் உடலின் மற்ற திசுக்களில் ஏற்படும் நச்சுதன்மையினால் குறைகிறது.

கதிர் இயக்க சிகிச்சையும் (Radiotherapy) பொதுவான திசுக்களை பாதிக்கும்.

மிகவும் முற்றிய நிலையில் இருப்பவர்களில் மரணவலி தணிப்புச் சிகிச்சை மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

புற்றுநோயைக் கண்டறிந்த பின்னர் ஒருவர் உயிர் பிழைப்பது, என்ன வகைப் புற்றுநோய் என்பதிலும், அதனைக் கண்டறியும்போது என்ன நிலையில் அவரது நோய் நிலை இருந்தது என்பதிலும் தங்கியிருக்கும்.

15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் ஏற்படும் புற்றுநோய்க்கு வளர்ந்த நாடுகளில் 5 ஆண்டுகால பிழைத்திருக்கும் தன்மை 80%-ஆக உள்ளது.

அமெரிக்காவில் 5 ஆண்டு பிழைத்திருக்கும் வாய்ப்பு 66% ஆக உள்ளது.

புற்றுநோய் எந்த வயதினரையும் தாக்கும் எனினும் வயது கூடக்கூட புற்றுநோய் தாக்கும் வாய்ப்பும் அதிகரிக்கிறது.

புற்றுநோய் காரணமாக சுமார் 13% மனித இன இழப்பு ஏற்படு வருகிறது.

மிக பொதுவான புற்றுநோய் வகைகள் நுரையீரல் புற்றுநோய், முன்னிற்குஞ்சுரப்பி புற்றுநோய், பெருங்குடல் மலகுடலுக்குரிய புற்றுநோய், வயிற்றுப் புற்றுநோய் (இரைப்பைப் புற்றுநோய்) ஆகியனவாகும்.

பெண்களில் மார்பகப் புற்றுநோய், கருப்பப்பை வாய்ப் புற்றுநோய், பெருங்குடல், மலகுடலுக்குரிய புற்றுநோய், ஆகியனவாகும்.

பொதுவாக குழந்தைகளில் கடும் நிணநீர்க் குழியப் புற்றுநோய், மூளைகட்டி போன்றவை அதிகமாக இருப்பினும், ஆப்பிரிக்காவில் உள்ள குழந்தைகளில் Non-Hodgkin Lymphoma அதிகளவில் இருக்கின்றன.

உலக புற்றுநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4ஆம் தேதி உலக புற்றுநோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

பூமியில் நிகழும் புகைப்பிடிப்புகளினால் இயற்கையின் நுரையீரலில் விழுந்தது ஓட்டை.

ஓசோன் படலத்தில்
புற்றுநோயாய் !



புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்

# வேண்டாம் வீண் முயற்சி மனிதா !!!!

Dr. முனைவர். நு. முருகேஸ்வரி,
பேராசிரியர் மகளிரியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

இன்றைய சூழலில் சமூகத்தில் சிரமமான சூழலையும் பிரச்சனைகளையும் எதிர்த்து/சமாளித்து போராடி அந்த சூழலிலோ அல்லது பிரச்சனையில் இருந்தோ வெளியே வர முயற்சிப்பதில்லை. பிரச்சனையில் இருந்து விடுபட அல்லது அதை சமாளிக்க தைரியமில்லாமல் மனவலிமை இழந்து தற்கொலையைத் தேர்தெடுக்கின்றனர். குழந்தைகள் முதல் பெரியார்கள் வரை ஏதோ ஒரு பயம், அல்லது விரக்தி ஏற்பட்டாலும் எடுத்துக்காட்டாக தேர்வு எழுதுவதை நினைத்து பயம் என்றாலும் தற்கொலை அல்லது தேர்வில் எண்ணிய மதிப்பெண் கிடைவில்லை என்றாலும் தற்கொலை,வாங்கிய கடனை கட்ட முடியவில்லை என்றாலும் தற்கொலை, என குழந்தைகள், தினக்கூலிகள், விவசாயிகள், பெரியோர்கள் போன்றோர்களின் தற்கொலை விகிதம் தற்போது அதிகரித்து வருகிறது. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதாக தெரிவிக்கின்றது. இந்த தீடீர் மரணங்களால் இவர்களுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்கள் மீது இது போன்ற சம்பவங்கள் ஆழமான தாக்கத்தையம் சோகத்தையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இதன் விளைவாக, கடுமையான துக்கத்தையம் சோகத்தையும் அனுபவிப்பவர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் இருந்து வருகிறது.

உலக தற்கொலை தடுப்பு தினம் முதலில் 2003 இல் தொடங்கப்பட்டது. உலக சுகாதார அமைப்புடன் இணைந்து தற்கொலை தடுப்பிற்கான சர்வதேச சங்கமானது நிறுவப்பட்டது. 2003 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 10 ஆம் தேதி, உலக தற்கொலை தடுப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இதுபற்றிய விழிப்புணர்வையும் தற்கொலை தடுப்பின் அவசியத்தையும் அரசு, தனியார் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றனர்.



உலக தற்கொலை தடுப்பு தினத்தின் முக்கிய நோக்கமானது, தற்கொலையைத் தடுப்பதற்கான வழிகளை உருவாக்கி அத்தொடர் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது, மனிதர்களுக்கு குறிப்பாக குழந்தைகள்,வளரிளம் பெண்கள் மற்றும் ஆண்கள் முதியோர்கள் போன்றோருக்கு தேவையான மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நபரும், ஒரு பெற்றோர், ஒரு குழந்தை, ஒரு உடன்பிறப்பு, ஒரு நண்பர் அல்லது ஒரு சக ஊழியர் போன்றவர்களை கையாள்கின்றனர். அப்படி இருக்கும் சூழலில் ஒவ்வொருவரும் சக மனிதனின் தற்கொலை

எண்ணம் தோன்றும் எண்ணத்தை மாற்றி அவர்களை வாழ வைக்கும் முயற்சியை எடுக்க வேண்டும். இவற்றை வழிகாட்டுவதே இந்த நாளின் முக்கிய நோக்கம் ஆகும். பிறரின் வாழ்க்கையில் நேர்மறையான சரியான மாற்றத்தை ஏற்படுத்தவும் இக்கட்டான சூழலில் வழிகாட்டவும் பிரச்சனை ஏற்படும் பொழுது அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை கூறவும் ஏதோ ஒரு உறவு தேவைப்படுகின்றது. குறிப்பாக ஒவ்வொரு பெற்றோரும் குழந்தைகளிடம் அவர்களுடைய தினசரி பள்ளிநிகழ்வை பகிர்ந்து கொள்ளச்சொல்லுங்கள்.

அதை பொறுமையுடன் கேட்டு குழந்தைக்கு தேவையான பதிலையோ அல்லது அவர்களுக்கு தேவைப்படும் ஆலோசனையையோ கொடுப்பதற்கு தவறாதீர்கள். அவர்களின் வகுப்பாசிரியர் யார் நெருங்கிய நண்பர்கள் யார், தலைமையாசிரியர் யார் போன்ற அடிப்படையான சில தகவல்களை பெற்றோர்கள் தெரிந்து வைத்து கொள்வது அவசியம். பெற்றோர்கள் குழந்தைகளிடம் கண்டிப்பாக இருப்பதைவிட நண்பர்களாக நடந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.அவர்களின் பேச்சு செயல் மற்றும் நடவடிக்கைகளை அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். அவர்களின் செயலிலோ பேச்சிலோ மாற்றம் தெரிந்தால் உடனடியாக அவர்களிடம் ஏற்பட்டுள்ள பிரச்சனை மன அழுத்தம் எதுவாயினும் தெரிந்து கொள்ள முயற்சசிக்க வேண்டும். பள்ளியில் ஆசிரியர்களும் தொடர்ந்து குழந்தைகளை கண்காணிக்க வேண்டும்.

படிப்பினால், சுற்றுப்புற சூழ்நிலையினால், சக நண்பர்களால், குடும்ப சூழலால் என போன்ற காரணங்களால் ஏற்படும் மன அழுத்தம் சோர்வு கவலை தொடர் சிந்தனை தனித்து இருத்தல் போன்ற மாற்றங்களை உடனடியாக கவனத்தில் எடுத்து அவற்றை தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். கற்பித்தலோடு வாழ்க்கை கல்வி போன்ற கூடுதல் வழிகாட்டுதலோடு குழந்தைகளை கையாள வேண்டும். வளரிளம் பெண்கள் மற்றும் ஆண்களும் கூட சில சூழலில் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை பற்றியோ சிரமமான சூழல் பற்றியோ தங்கள் பெற்றோரிடமோ அல்லது சக நண்பர்களிடமோ பகிர்வதோ அல்லது விளக்கம் கேட்பதோ அல்லது பிரச்சனைக்கான தீர்வை தேடுவதோ இல்லை மாறாக தற்கொலையே முடிவு என்றெண்ணி தான் அழகாக வாழ வேண்டிய வாழ்க்கையை தொலைத்து அவர்களை சார்ந்தவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்குகின்றனர். இன்னும் சில குடும்பங்களில் கூட வறுமை,கடன் தொல்லை, வேலையின்மைமை போன்ற பிரச்சினைகளுக்கெல்லாம் தற்கொலையையே முடிவாக எடுக்கின்றனர். எந்த பிரச்சனைக்கும் தற்கொலை என்பது முடிவான செயல் அல்ல. இது போன்ற மோசமான முடிவை முதியோர்களுகும் எடுக்கின்றனர் என்பது மிகவும் வேதனையளிக்கின்றது.

2021 முதல் 2023 வரை பொருந்தக்கூடிய உலக தற்கொலை தடுப்பு தினத்திற்கான கருப்பொருள் ஒரு மூன்று ஆண்டு கருப்பொருள் ஆகும். அதாவது "செயல் மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்" என்ற நோக்கத்தோடு அரசும், அரசு சாரா அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் தன்னார்வலர்களும் பொதுமக்களும் செயல்பட்டு வருகின்றனர்.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளிவிவரங்களின்படி, இந்தியாவில் தற்கொலை செய்துகொண்டவர்களில் 23.4சதவீதம் பேர் தினக்கூலி வேலையில் இருந்தவர்கள். குறிப்பாக இந்தியாவில் தற்கொலை செய்துகொண்ட 32,5631தினக்கூலி தொழிலாளர்களில், 5,186தொழிலாளர்கள் தமிழகத்தில் இறந்துள்ளனர் என பதிவாகியுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் லட்சம் பேர் தங்கள் உயிரை தாங்களே மாய்த்து கொள்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி, 2016ஆம் ஆண்டு 15 முதல் 29 வயது வரை உள்ளவர்கள் இறப்பதற்கு இரண்டாவது மிகப் பெரிய காரணம் தற்கொலை ஆகும்.

பெரும்பாலும் பெண்களுக்கு திருமண வாழ்வு மற்றும் அதில் ஏற்படும் பிரச்சனைகள்தான் தற்கொலைக்கு காரணமாக அமைகிறது. அவர்களை தடுப்பதும் அதுதான். தங்கள் பெற்றோரின் கண்ணீரை பார்க்கும்போது அவர்கள் மனம் மாறுகிறார்கள்.

ஒவ்வொரு 40 நொடிகளில் நாம் ஒரு உயிரை தற்கொலையினால் இழக்கின்றோம். அந்த உயிர் ஒரு குழந்தையாகவோ, ஆசிரியராகவோ,

மனைவியாகவோ இருக்கலாம். தற்கொலை முயற்சிகளோ அதை விட 25 மடங்கு அதிகமாக இருக்கின்றன என்கிறது ஆய்வு.

தற்கொலைகள் ஒரே ஒரு காரணத்தினால் நிகழ்வது போல தோன்றினாலும், உண்மை அதுவல்ல. ஒவ்வொரு தற்கொலையின் பின்னணியிலும் பல்வேறு உயிரியல், உளவியல் மற்றும் சமூக காரணிகள் உண்டு. மன அழுத்தம் மட்டும் 90 சதவீத தற்கொலைகளுக்கு காரணமாகிறது. மது பழக்கத்தினால் தவறான முடிவுகளை தேடுகிறவர்கள் பலர். குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களை தற்கொலையால் இழந்தால், அவர்களுக்கு அதே எண்ணம் ஏற்படுவதற்கான மரபணு சார்ந்த ஆபத்து உண்டு. இதைத்தவிர, உளவியல் ரீதியான பிரச்சனைகள் இன்றைய தலைமுறையினருக்கு அதிகம்.

உலகளவில் கடந்த 45 ஆண்டுகளில் தற்கொலை 60 சதவீதம் அதிகரித்துள்ளது. 15 முதல் 45 வயது வரை ஏற்படும் உயிரிழப்புகளுக்கு தற்கொலை ஒரு முக்கிய காரணம். நம்முடைய பாட்டி, தாத்தாக்கள் பெரிய சுனாமியை எதிர்த்து நின்று ஜெயித்தபோது, வாழ்க்கையில் ஒரு சிறு அலை இன்றைய தலைமுறையினரை ஏன் அடித்துச் செல்கிறது? உளவியல் ரீதியாக இதை 'Resilience' என்கிறோம். ஒரு பந்தை தரையில் தட்டினால், அது மீண்டும் மேலே எழுவது போல் நாம் ஒவ்வொருவர் உள்ளிலும் சவால்களை சமாளிக்கும் தன்மை புதைந்து கிடக்கிறது.

தற்கொலை என்ற எண்ணத்தை அடியோடு வேரறுக்க பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒவ்வொரு தனி மனிதரும் தம்மோடு நெருங்கிய தொடர்போடு இருக்கும் நண்பர்கள் உறவுகள் என அனைவரிடமும் நம்பிக்கை குறையா வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதரும் ஏதோ ஒரு சூழலில் சவால்களையும் சிக்கல்களையும் சந்தித்தேயாகவேண்டும். அவற்றை நேர்மறையான எண்ணங்களாலும்,செயல்களாலும் வென்று வெற்றியை கண்டு தோல்வியை முறியடிக்க வேண்டும். சில நேரங்களில் தோல்வியை ஏற்க மனமில்லாமல் வெற்றியை மட்டும் ஏற்றுக்கொள்வது உகந்ததல்ல. எதுவும் நிரந்தரம் இல்ல என்று எண்ணி அன்றாட வேலையில் நாட்டம் கொண்டால் நம் மனம் எதையும் சந்திக்கும் திறன் பெறும்.

அனைத்தையும் மீறி தற்கொலை எண்ணம் தோன்றினால் தேசிய தற்கொலை தடுப்பு மையம் 988 என்ற இலவச எண்ணிற்கு அழைத்து பேசுங்கள். தற்கொலை என்பது எதற்கும் முடிவல்ல.

எனவே

சாதிக்க பிறந்த நாம் சந்திக்க வேண்டிய சவால்கள் ஏராளம்....
சிந்தித்து செயல்பட்டால் செயல் வடிவமாகும்....
சவால்களை சந்தித்தால் வெற்றி உங்கள் வசப்படும்...
துன்பமும் தோல்வியும் நிரந்தரம் இல்லை !!!
எதிர்த்து நில் - தோல்வி உன்னிடம் தோற்று போகும் !!!
துணிந்து செய் - துன்பம் உன்னிடம் துவண்டு போகும்!!!
போராடு - வெற்றி உன்னை தேடி வரும் !!!
ஆம் மனிதர்களே!!!
